

MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
JurongHealth
SingHealth

SINGHEALTH / PIL / T100R0

நோயாளி தகவல் கையேடு

# ஆன்டிபயோடிக் மருந்துகள்
## (ANTIBIOTICS)

அஸித்ரோமைசின் (Azithromycin)
கிளாரித்ரோமைசின் (Clarithromycin)
எரித்ரோமைசின் (Erythromycin)

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

# அஸித்ரோமைசின் (Azithromycin), கிளாரித்ரோமைசின் (Clarithromycin) மற்றும் எரித்ரோமைசின் (Erythromycin) ஆகியவை நுண்கிருமித் தொற்றுகளுக்குச் சிகிச்சை அளிக்கப் பயன்படுத்தப்படுகின்றன.

## மருந்தை நான் **எப்படி** பயன்படுத்த வேண்டும்?

எரித்ரோமைசினை ஒரு முழு கிளாஸ் தண்ணீருடன் வெறும் வயிற்றில் எடுக்கலாம் (உணவுக்கு 1 மணி நேரத்திற்கு முன்பு அல்லது உணவு உண்ட 2 மணி நேரம் கழித்து). வயிறு பாதித்தால், இதை உணவுடன் எடுக்கலாம். மேல் பூச்சுள்ள மாத்திரைகளாக எடுப்பவர்கள், அவற்றை முழுதாக விழுங்க வேண்டும். எந்த மாதிரியான மாத்திரை அல்லது குழல் மாத்திரையை (capsule) நீங்கள் எடுத்து வருகிறீர்கள் என்பது தெரியாவிட்டால், மருந்தாளரிடம் கேளுங்கள்.

கிளாரித்ரோமைசினை உணவுடனோ அல்லது உணவுக்குப் பிறகோ எடுக்கலாம்.

அஸித்ரோமைசினை உணவுடன் அல்லது உணவுக்குப் பிறகு எடுக்க வேண்டும்.

மேற்கூறிய மருந்துகளை அமில எதிர்ப்பு மருந்துகளோடு உட்கொள்ளாதீர்கள். அமில எதிர்ப்பு மருந்துகள் இந்த மருந்துகளின் செயல்திறனைக் குறைத்துவிடும். அமில எதிர்ப்பு மருந்துகள் எடுப்பதற்கு 1 மணி நேரத்திற்கு முன்பு, அல்லது அவற்றை எடுத்த 2 மணி நேரம் கழித்து இந்த மருந்துகளை எடுங்கள்.

மருந்தை இரவிலும் பகலிலும் முறையான கால இடைவெளிகளில் உட்கொள்ளுங்கள். மருந்து எடுக்கத் தொடங்கிய சில நாட்களில் குணம் தெரிய ஆரம்பித்தாலும், கொடுக்கப்படும் மாத்திரைகள் எல்லாவற்றையும் முடித்துவிடுங்கள். ஏனெனில், கிருமித்தொற்று முழுமையாக நீங்குவதற்கு முன்பே அறிகுறிகள் மேம்பட ஆரம்பிக்கலாம்.

## மருந்து போட்டுக் கொள்ள **மறந்துவிட்டால்** என்ன செய்வது?

ஒரு வேளைக்குரிய மருந்தை நீங்கள் எடுக்கத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே உட்கொள்ளுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ உட்கொள்ளாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள

## மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

வயிற்று வலி, தசைப் பிடிப்பு, குமட்டல் மற்றும் வாந்தி போன்ற சாதாரண பக்க-விளைவுகள் இருக்கலாம். வாய்ப் புண்களும் ஏற்படலாம்.

கிளாரித்ரோமைசின் எடுத்த பிறகு தலைவலி பாதிக்கலாம்.

பின்வரும் அறிகுறிகள் ஏற்பட்டால், மருந்தை உடனே நிறுத்திவிட்டு மருத்துவரைப் பாருங்கள்; வயிற்றுப் பிடிப்பு அல்லது வயிற்று வலி, வயிறு மென்மையாதல், வயிற்றுப்போக்கு (நீர் போன்ற, கடுமையான, சில சமயம் இரத்தம் கலந்த வயிற்றுப்போக்கு), மூச்சு விடச் சிரமப்படுதல், தோல் தடிப்புகள் அல்லது முகம், வாய், கழுத்து, கை கால்கள் வீங்குதல்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வந்தால், அதை மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவியுங்கள்.

வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருந்தால், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்பட்டால் அதைக் கண்டிப்பாக மருத்துவர் அல்லது மருந்தாளரிடம் தெரிவிக்க வேண்டும். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்; முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வந்தால், கர்ப்பமாக இருந்தால், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருந்தால், மருத்துவரிடம் தெரிவியுங்கள்.

அறிகுறிகள் அடுத்த சில நாட்களில் மேம்படவில்லை என்றால் அல்லது அவை மோசமானால் மருத்துவரைப் பாருங்கள்.

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும் ?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.